# யூன் – 17 – பொதுக்கால 11ம் திங்கள்

## தூய கிரிகோரி பார்பரிகோ

**"நான் உங்களுக்குச் சொல்கிறேன்: தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம். மாறாக, உங்களை வலக் கன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள்." மத். 5:39**

---

## முதல் வாசகம் : 2 கொரிந்தியர் 6 : 1 - 10

சகோதரர், சகோதரிகளே நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட அருளை வீணாக்க வேண்டாம் என அவரோடு இணைந்து உழைக்கும் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்."தகுந்த வேளையில் நான் உமக்குப் பதிலளித்தேன். விடுதலை நாளில் உமக்குத் துணையாய் இருந்தேன்" எனக் கடவுள் கூறுகிறார். இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள்!எவரும் குறைகூறா வண்ணம் எங்கள் திருப்பணியை ஆற்ற விரும்புகிறோம். எனவே நாங்கள் எவருக்கும் இடையூறாக இருப்பதில்லை.மாறாக அனைத்துச் சூழ்நிலைகளிலும் நாங்கள் கடவுளின் பணியாளர்கள் என்பதை எங்கள் நடத்தையால் காட்டுகிறோம் வேதனை, இடர், நெருக்கடி ஆகியவற்றை மிகுந்த மன உறுதியோடு தாங்கிவருகிறோம். நாங்கள் அடிக்கப்பட்டோம். சிறையில் அடைக்கப்பட்டோம். குழப்பங்களில் சிக்கினோம். பாடுபட்டு உழைத்தோம். கண்விழித்திருந்தோம். பட்டினி கிடந்தோம். தூய்மை, அறிவு, பொறுமை, நன்மை, தூய ஆவியின் கொடைகள், வெளிவேட மற்ற அன்பு ஆகியவற்றைக் கொண்டிருக்கிறோம். உண்மையையே பேசி வருகிறோம். கடவுளின் வல்லமையைப் பெற்றிருக்கிறோம். நேர்மையே எங்கள் படைக்கலாம். அதை வலக்கையிலும் இடக்கையிலும் நாங்கள் தாங்கியுள்ளோம்.போற்றுவார் போற்றலும் தூற்றுவார் தூற்றலும் எங்களுக்கு ஒரு பொருட்டல்ல. புகழுவார் புகழலும் இகழுவார் இகழலும் எங்களைப் பாதிப்பதில்லை. ஏமாற்றுவோர் என அவர்களுக்குத் தோன்றினாலும் நாங்கள் உண்மையான பணியாளர்கள்.அறிமுகமில்லாதோர் எனத் தோன்றினாலும் எல்லாரும் எங்களை அறிவர். செத்துக் கொண்டிருப்பவர்கள் எனத் தோன்றினாலும் நாங்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். கொடுமையாகத் தண்டிக்கப்பட்டோர் எனத் தோன்றினாலும் நாங்கள் கொல்லப்படவில்லை.துயருற்றோர் எனத் தோன்றினாலும் நாங்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கிறோம். ஏழையர் எனத் தோன்றினாலும் நாங்கள் பலரைச் செல்வராக்குகிறோம். எதுவும் இல்லாதவர் எனத் தோன்றினாலும் நாங்கள் எல்லாவற்றையும் பெற்றிருக்கிறோம்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தம் மீட்பை அறிவித்தார்.

## நற்செய்தி : மத்தேயு 5 : 38 - 42

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது :"கண்ணுக்குக் கண்", "பல்லுக்குப் பல்" என்று கூறப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் தீமை செய்பவரை எதிர்க்கவேண்டாம். மாறாக, உங்களை வலக் கன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள். ஒருவர் உங்களுக்கு எதிராக வழக்குத் தொடுத்து, உங்கள் அங்கியை எடுத்துக்கொள்ள விரும்பினால் உங்கள் மேலுடையையும் அவர் எடுத்துக் கொள்ள விட்டு விடுங்கள்.எவராவது உங்களை ஒரு கல் தொலை வரக் கட்டாயப்படுத்தினால் அவரோடு இரு கல் தொலை செல்லுங்கள்" என்றார்,

**தியானம்:** கிறிஸ்துவின் போதனைகளின் அதி உச்சமான வரிகளை இன்றைய நற்செய்தில் நாம் வாசிக்கின்றோம். எல்லா மதங்களும் ஒன்றையேதான் போதிக்கின்றன என வாதிடும் பலருக்கும் இன்றைய நற்செய்தி வாசகம் ஒரு சவாலாகவே அமைந்திருக்கின்றது. மற்ற மதங்களிலிருந்தும், போதனைகளிலிருந்தும் முற்றிலும் மாறுபட்ட இந்த வார்த்தைகள்தான் கிறிஸ்தவத்தின் தனித்துவத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றன. அன்புக்கு அன்பு. பகைக்குப் பகை. பழிக்குப் பழி. தவறுக்குத் தண்டனை. என்ற கோட்பாடுகளிலிருந்து வேறுபட்டு அன்புக்கு மேலன்பு, பகைவருக்கும் அன்பு. பழிக்கு பாதம் கழுவல். தவறுக்கு மன்னிப்பு, என்ற தத்துவம்தான் கிறிஸ்தவத்தின் சிகரமும், சிம்மாசனமும் ஆகும். கிறிஸ்துவின் திருத்தூதர்கள் கிறிஸ்துவின் இந்த போதனைகளைக் கடைப்பிடித்து வாழ்ந்தமைக்கு இன்றைய முதல் வாசகம் சாட்சி பகர்கின்றது. எனவேதான், கிறிஸ்துவை அறிந்திராத மக்கள் பலரும் கிறிஸ்துவின் போதனைகளை அவரது திருத்தூதர்களின் வாழ்க்கை முறைமையில் கண்டுபாவித்து அதன் மூலம் கிறிஸ்துவை தமது மீட்பராக ஏற்றுக்கொள்ள முடிந்தது. திருச்சபை உலகெங்கும் ஓங்கி வளர்ந்தது. விரிந்து பரவியது. ஆனால், இன்று நமது வாழ்க்கைமுறை எவ்வாறானது? என்பதை சற்று சுயஆய்வு செய்ய இன்றைய இறைவார்த்தைகள் நமக்கு அழைப்பு விடுக்கின்றன. கிறிஸ்துவும், அவர் போதனைகளும், அவரைச் சார்ந்த மக்களும் உலகளாவிய ரீதியில் கடும் இன்னல்களுக்கு உள்ளாகியிருக்கும் இச்சூழ்நிலையில், நாம் இன்றைய நற்செய்தி நமக்குச் சொல்லித்தரும் விழுமியங்களைக் கடைப்பிடித்து வாழ்வதன் மூலமே, நமது தனித்துவத்தை உலகுக்கு உணர்த்த முடியும். கிறிஸ்துவையும் இன்னும் அதிகமாக இவ்வுலகுக்கு அறிவிக்க முடியும். நிலைவாழ்வையும் நாம் பரிசாக்கிக் கொள்ள இயலும்.